**உறுப்பினர் செயலர் (பொ), சேலம் உள்ளூர் திட்டக் குழுமம், சேலம்**

**அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை. திரு. அ. விஜயன், பி.இ.,**

**ந.க.எண். 4628/2018 சேஉதிகு** **நாள். 25.02.2019.**

**பொருள் :** அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம், 2017 - சேலம் மாவட்டம்/வட்டம், மல்லூர் பேரூராட்சி/கிராமம், ச.எண்.70/4APt, 70/5, 65/2Pt-ல் **2.39** ஏக்கர் **(9672.02** ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :**

1. அரசாணை (நிலை) எண். **78,** வீட் டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.**4(3)**) துறை நாள். **04.05.2017**
2. அரசாணை (நிலை) எண். **172,** வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.**4(3)**) துறை நாள். **13.10.2017**
3. அரசாணை (நிலை) எண். **55** வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.**4(3)**) துறை நாள். 02.05.2018.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறை ந.க.எண். **13193/2017/**LA2 நாள். **30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017** மற்றும் **20.12.2017.**
5. மனுதாரர் திரு.தெய்வசிகாமணி, சேலம் அவர்களின் ஆன்லைன் எண்.DTCP/L/0118599/2017, விண்ணப்பம் நாள்.**24.**04.2018.

*********

**உத்தரவு:**

பார்வை 1, 2 மற்றும் 3–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை **4**–ல் கண்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் பார்வை **5**ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

சேலம் மாவட்டம்/வட்டம், மல்லூர் பேரூராட்சி/கிராமம், ச.எண்.70/4APt, 70/5, 65/2Pt-ல் **2.39** ஏக்கர் **(9672.02** ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள **ஸ்ரீ பூர்ணாம்பிகை நகர்** என்ற அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ(வரன்முறை)/சேஉதிகு எண்.35/2019** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | **2.39 ஏக்கர் (9672.02 ச.மீ)** |
| மொத்த மனைகள் | : | 44 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 38 |
| விற்கப்பட்ட மனை எண்கள். | : | 2 to 23, 25, 26, 29 to 41, 44 |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 06 |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | 01, 24, 27, 28, 42, 43 |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவு | | 1031.21 ச.மீ |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு பூங்கா (மனை எண்.24E) | : | 104.00 ச.மீ **(10.08%)** |

செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்

**1)** பரிசீலனை கட்டணம் :

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு **ரூ.500/–** வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் 06 மனைகளுக்கு **ரூ.3,000/-** செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனை கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

**2)** வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் :

| மனை எண். | பரப்பளவு (சமீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30/– ரூபாய் வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய்.75/– வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|
| வரைபடத்தில் கண்டுள்ள OSR இடங்களை தவிர்த்து இதர மனைகளுக்கு அரசாணையின்படி உரிய கட்டணங்களை பெற்றுக்கொண்டு வன்முறைப்படுத்த தெரிவிக்கப்படுகிறது. | | | |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

**அ)** வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு :

| | |
|---|---|
| 0217 Urban Development-60 Other Urban Development Schemes – 800 Others Receipts - AT Receipts Under Regularisation Charges of Unapproved Layouts and plots – DTCP 27 Non Taxation Fees - 30 Regularisation. (DPC : 0217 60 800 AT 2730) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

**ஆ)** வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் (ந.வ.4(3)) துறை நாள். 13.10.2017–ல் விதி எண்.7(g)(ii)–ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொ),
சேலம் உள்ளூர் திட்டக் குழுமம், சேலம்.

25/02/2019 25/2/19

**இணைப்பு**
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.

**பெறுநர்,**
செயல் அலுவலர்,
மல்லூர் பேரூராட்சி,
மல்லூர்,
சேலம்.

**நகல்**

1. திரு.தெய்வசிகாமணி,
க.எண்.65, ராஜாஜி ரோடு,
சேலம் -636007.

2. வட்டாட்சியர்,
சேலம் வட்டம்,
சேலம் மாவட்டம்.
— சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு

3. சார்பதிவாளர்,
வீரபாண்டி,
சேலம்.
— சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.

<u>மல்லூர் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்</u>
<u>ஆணை பிறப்பிப்பவர்: திரு.சீ.இராஜவிஜயகணேசன்.,பி.எஸ்.சி.,</u>

<u>மூ.மு.எண்.76/2019</u> <u>நாள்.15.03.2019</u>

பொருள் : அனுமதியற்ற தனிமனை – சேலம் மாவட்டம் – மல்லூர் முதல்நிலை பேரூராட்சி – க.எண்.65, ராஜாஜி ரோடு, சேலம், திரு. தெய்வசிகாமணி மல்லூர், சேலம் மாவட்டம், திரு. தெய்வசிகாமணி என்பவர் – மல்லூர் கிராமம் சர்வே எண்.70/4APt (ம) 70/5,65/2Pt -ல் உள்ள மனை பகுதி – அனுமதியற்ற தனி மனை எண். 1, 24பா, 27,28,42 மற்றும் 43ல் அனுமதியற்ற தனி மனையை வரன் முறைப்படுத்தி ஆணை பிறப்பிக்கப்படுகிறது – தொடர்பாக.

பார்வை :
1. திரு. தெய்வசிகாமணி க.எண்.65, ராஜாஜி ரோடு, சேலம் மாவட்டம் என்பவரது விண்ணப்பம் நாள். 04.03.2019
2. மல்லூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் தல ஆய்வு நாள்.04.03.2019.
3. அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, ந.வ4(3). நாள். 04.05.2017.
4. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சூரமங்கலம், சேலம் அவர்களின் கடித ந.க.எண்.1155/2018சேஉதிகு, நாள்.11.10.2018.
5. இவ்வலுவலக குறிப்பாணை எண். 76/2019 நாள். .03.2019
6. அரசாணை (நிலை) எண்.172, Housing and Urban Development (uD4(3)) Dept dt: 13.10.2017.
7. திரு. தெய்வசிகாமணி அவர்களின் ஆன்லைன் விண்ண்ப்பம் எண்.DTCP/L/01-18599/2017, நாள்.24.04.2018.

- - - - -

<u>உத்தரவு:</u>

பார்வை 1ல் காணும் விண்ணப்பத்தில் கண்டுள்ளபடி, க.எண்.65, ராஜாஜி ரோடு, சேலம், திரு. தெய்வசிகாமணி. என்பவரது விண்ணப்பத்தின் பெயரில் பார்வை 2ல் காணும் செயல் அலுவலரின் தல ஆய்வு படி மல்லூர் கிராமம், சர்வே எண்.70/4APt (ம) 70/5,65/2Pt -ல் தனி மனை எண்.1,24பா,27,28,42மற்றும்43ல் தனி மனைக்கு 901.57 (144.85+38.38+186.10+178.80+179.14+174.30) சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தினை பார்வை 3ல் காணும் அரசாணையின் படி, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சூரமங்கலம், சேலம் அவர்களின் கடிதத்தில் கண்டுள்ளபடி தனிமனை வரன்முறை ஆணை அளித்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 5ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதத்தின் மூலம் மேற்கண்ட தனி மனைக்கு கட்டணங்கள் செலுத்த உரிமையாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு கீழ்கண்டுள்ளவாறு உரிய தலைப்பில் தொகை செலுத்தப்பட்டுள்ளது.

## கட்டண விபரங்கள்

| வ. எண் | கட்டணம் விபரம் | தொகை (ரூபாயில்) | கட்டணம் செலுத்தப்பட்ட விபரம் | சலான் எண் | செலுத்தப் பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | வரன்முறை படுத்தும் கட்டணம் மனை எண். 1, 24பா, 27,28,42 மற்றும் 43 (901.57 x 33) | ரூ. 29,760.00 | பாரத மாநில வங்கி, சேலம் (கருவூலகம்) | 065/2019 | 11.03.2019 |
| 2 | பேரூராட்சி வளர்ச்சி கட்டணம் மனைஎண். 1,24பா, 27,28,42 மற்றும் 43 (901.57 x 75) | ரூ. 67,618.00 | மல்லூர் பேரூராட்சி வங்கி கணக்கு | 746/ 2018–19 (By NEFT Adjustment) | 13.03.2019 |

மேற்கண்ட தனிமனை வரன்முறை படுத்துதல் கட்டணம் கருவூலத்திலும், பேரூராட்சி வளர்ச்சி கட்டணம் மல்லூர் முதல்நிலை பேரூராட்சி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, மல்லூர் கிராமம் சர்வே எண்.70/4APt (ம) 70/5,65/2Pt -ல் தனி மனை எண். 1,24பா,27,28,42 மற்றும் 43ல் தனி மனைக்கு (144.85+38.38+186.10+178.80+179.14+174.30) –க்கு 901.57 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட இடத்திற்கு இதன் மூலம் தனிமனை வரன்முறை ஆணையிடப்படுகிறது.

செயல் அலுவலர்,
மல்லூர் முதல்நிலை பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.

பேரூராட்சி சேலம் மாவட்டம் மல்லூர்-636 203

15.3.19.

பெறுநர்:
திரு. தெய்வசிகாமணி,
க.எண்.65, ராஜாஜி ரோடு,
சேலம் மாவட்டம்.

நகல்.

1. சார்பதிவாளர் அலுவலர், சேலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2. உதவி இயக்குநர், பேரூராட்சிகள் சேலம் மண்டலம், சேலம் அவர்களுக்கு தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சூரமங்கலம், சேலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.